**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3620/ஆ5/2023, நாள்.05.02.2024**

பொருள் : பள்ளிக் கல்வி – குழந்தை நலம் – மத்திய அரசின் திட்டமான BBBP (Beti Bacho Beti Padhao) – பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி, திறன் மேம்பாடு, பாதுகாப்பு, சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்கும் பொருட்டு 09.02.2024 மற்றும் 10.02.2024 ஆகிய நாட்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுதல் – பள்ளியில் பயிலும் மாணவியர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்ட சமூகநல அலுவலரின் கடித ந.க.எண்.1141/அ/2022, நாள். 12.01.2024

*****

பார்வையில் காணும் கடிதத்தில், மத்திய அரசின் திட்டமான "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிற்போம்" (Beti Bacho Beti Padhao) திட்டமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தில் வைக்கவும் அவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திடவும், கல்வி அளித்தல், திறன்களை வளர்த்தல், பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தினை அதிகரித்தல் மற்றும் பெண்குழந்தை கருக்கலைப்பு அல்லது பெண் சிசுக்கொலைகளை தடுத்தல் போன்றவற்றினை செயல்படுத்திட "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிற்போம்" (Beti Bacho Beti Padhao) என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி கீழ்க்காணும் அட்டவணைப்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிகழ்ச்சியின் பெயர் | நிகழ்ச்சி நடைபெறும் இடம் | நிகழ்ச்சி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | அறிவியல் கண்காட்சி | அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர் | 09.02.2024 (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணி முதல் | 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள் கலந்து கொள்ள வேண்டும். (ஒரு பள்ளிக்கு குறைந்தபட்சம் 3 படைப்புகள்) |
| 2. | பேச்சு போட்டி, கவிதை போட்டி, கட்டுரைபோட்டி, ஓவியப் போட்டி | | | 6 முதல் 08ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும் (4x1=4 மாணவிகள்) மற்றும் 9 முதல் 10ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும் (4x1=4 மாணவிகள்) = 8 மாணவிகள் கலந்து கொள்ள வேண்டும். |
| 3. | Career Counseling Activitives (Motivation Programm) | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர். | 10.02.2024 (சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் | 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள் கலந்துக் கொள்ள வேண்டும். |
| 4 | Counseling of Out of School Adolesent Girls Awarness Programm | | 10.02.2024 (சனிக்கிழமை) பிற்பகல் 2.00 மணி முதல் | இந்நிகழ்ச்சியில் BRTE's , Supervisor மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கலந்துக்கொள்ள வேண்டும். |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் (நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்) 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் பெண் பிள்ளைகள் மேற்காண் நடைபெறும் நிகழ்ச்சியில் தவறாமல் பொறுப்பாசிரியர் ஒருவருடன் கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் (நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்) தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு –

- கவிதைப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளுக்கு தாள்கள் மட்டும் வழங்கப்படும். ஓவியப் போட்டிக்கான பொருட்கள் மாணவியர்களே கொண்டு வரவேண்டும்.
- மேற்காண் நடைபெறும் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறும் மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றுதழ்கள் வழங்கப்படும்
- நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.)

1. அறிவியல் கண்காட்சி – அறிவியல் சார்ந்த படைப்புகள் மேற்கொள்ள வேண்டும்.

**கவிதை போட்டி, பேச்சு போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டியின் தலைப்புகள் –**

1. பேச்சுப் போட்டி – பெண்கள் நாட்டின் கண்கள் மற்றும் பெண் விடுதலை
2. கவிதை போட்டி – பார் போற்றும் பெண்கள்
3. கட்டுரை போட்டி – வீர மங்கை வேலுநாச்சியார் மற்றும் குழந்தை திருமணம் தடுத்தல்
4. ஓவியப் போட்டி – இலக்கிய பெண்மணிகள் மற்றும் விடுதலைக்காக போராடிய பெண்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட சமூகநல அலுவலர்,
   மாவட்ட சமுகநல அலுவலகம்,
   வேலூர் மாவட்டம் – 9.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.)
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
4. மாவட்ட திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம், காந்திநகர், வேலூர் மாவட்டம்.
   (BRTE's , மற்றம் Supervisor–களுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு)
5. தலைமையாசிரியர்கள்,
   அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   ஸ்ரீ வெங்டேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (நிகழ்ச்சிகள் நடைபெற போதுமான வசதிகள் செய்து தர தெரிவிக்கப்படுகிறது.)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)